முற்பகல் 10-50

திரு.கே.முனிவெங்கடப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதியிலுள்ள கிராம மக்கள் இன்றைக்கு நிலவள வங்கியின் மூலம் கொடுக்கப்படுகின்ற, இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியில் கொடுக்கப்படுகின்ற நலத் திட்டங்களைத் தெரிந்து கொள்வதற்காவது அந்த கிளையினுடைய ஒரு பகுதியை ஒரு கிளையாக அந்த தேன்கனிக்கோட்டையில் அமைக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா.ப. பட்டாபிராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலவள வங்கியின் மூலமாக கொடுக்கப்படுகின்ற கடன்களை விவரித்து எடுத்துச் சொல்வதற்காக கூட்டுறவுத் துறையிலே அதிகாரிகள் இருக்கிறார்கள். அவர்கள் கிராமங்கள்தோறும் சென்று கேட்கப்படுகின்ற கேள்விகளுக்கு பதில்களை அளித்து அவர்களுடைய ஐயங்களைத் தீர்த்து வைக்கிறார்கள். அந்த அளவில் இன்றைக்கும் ஓசூரில் உள்ள நிலவள வங்கியின் மூலமாக இந்த தேன்கனிக்கோட்டையில் இருக்கிற மக்கள் அவர்களை அணுகி நலத் திட்டங்களைப் பற்றி தெரிந்துகொள்வதற்கு வாய்ப்புகள் இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 315. டாக்டர் க. கோபால், இருக்கையில் இல்லை.

வினா எண் 316. டாக்டர் ஆ.வெ. புருஷோத்தமன், இருக்கையில் இல்லை. அவருக்குப் பதிலாக திரு.கா. பூ. முனுசாமி, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

316—

பெண்ணாகரம் ஊராட்சி ஒன்றியத்தைப் பிரித்தல்

***35728**—*டாக்டர் ஆ.வெ. புருஷோத்தமன்:*

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பெண்ணாகரம் ஊராட்சி ஒன்றியத்தை இரண்டாகப் பிரிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

[1995 ஏப்ரல் 17

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. கா.பூ. முனுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தர்மபுரி மாவட்டத்தில் பெண்ணாகரம் ஒன்றியம், தளி ஒன்றியம் இரண்டு ஒன்றியங்களும் மிகப் பெரிய ஒன்றியங்கள் ஆகும். அரசின் சார்பில் வழங்கப்படுகின்ற நிதி ஆண்டு ஒன்றுக்கு ஒரு கோடி ரூபாய் திட்டத்தில் இந்த இரண்டு ஒன்றியங்களும் முழுமையாக பயன்பெற முடியவில்லை. மேலும் பெண்ணாகரம் ஒன்றியம் காட்டுப் பகுதிகளை உள்ளடக்கிய ஒன்றியமாக இருக்கிற காரணத்தால் அந்த காட்டுப் பகுதியில் இருக்கிற ஏழை எளிய மக்களுக்கு அரசின்பால் செய்யக்கூடிய உதவிகள் சென்று அடைவது இல்லை. எனவே, நிர்வாக நலன் கருதியும் இந்த ஒன்றியம் இரண்டாகப் பிரிக்கப்படும் என்று சொன்னால் இந்த ஒரு கோடி ரூபாய் திட்டம் காட்டுப் பகுதியில் உள்ள மக்களுக்கு பயன்பெறும். எனவே பாப்பாரப்பட்டி அல்லது பெரும்பாலை பகுதிகளை தலைமையிடமாகக் கொண்டு இந்த ஒன்றியத்தை இரண்டாகப் பிரிக்க அரசு பரிசீலனை செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய அரசியலமைப்புச் சட்டம் 73-வது திருத்தத்தின்படி 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் இயற்றப்பட்டு கடந்த 22-4-1994 முதல் அமல்படுத்தப்பட்டிருக்கிறது. அதன்படி ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் பேரூராட்சிகள் போன்றவற்றை அமைக்கிற பணியும், பிரிக்கிற பணியும், மற்றும் தரம் உயர்த்துகிற பணியும் போன்ற கருத்துக்களைப் பரிசீலிப்பதை தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் திருத்தி அமைக்கப்பட்டு தேர்ந்தெடுக்கப்படும் ஊராட்சிகள், ஊராட்சி அமைப்புகள் பொறுப்பு ஏற்கும் வரை தள்ளி வைக்கலாம் என்று அரசு ஆணையிட்டு இருக்கிறது. ஆகவே, ஊராட்சி தேர்தல்கள் நடைபெற்று தேர்ந்தெடுக்கப்படும் ஊராட்சி அமைப்புகள் பொறுப்பு ஏற்கும் வரையில் இந்த வினாவில் கேட்கப்பட்டிருக்கின்ற அந்தப் பொருள் குறித்து நடவடிக்கை எடுக்க இயலாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 317, திரு. கா. சின்னசாமி, இருக்கையில் இல்லை.